**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சீர்காழி, மயிலாடுதுறை மாவட்டம்**

முன்னிலை – திரு.R.கைலாஷ், B.A., B.L.

குற்றவியல் நீதித்துறை நடுவர், சீர்காழி.

2026 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆம் நாள் செவ்வாய்கிழமை

CMP.No.274/2026

CNR.No.TNMY08-000900-2026

ராமதாஸ்
த/பெ. ராமன் .......மனுதாரர்

*/எதிராக/*

அரசுக்காக:-
காவல் உதவி ஆய்வாளர்,
ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலையம்,
குற்ற எண்.65/2026
U/s. 173, 109, 296(b), 118(1), 351(3) BNS ..........எதிர்மனுதாரர்/குற்றமுறையிடுபவர்.

இம்மனு 07.03.2026 ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இம்மனுவின் மீதான விசாரணையானது இன்று 24.03.2026 இறுதியாக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M. கார்த்திக் எதிர்மனுதாரர் தரப்பில் அரசு உதவி குற்றத்துறை வழக்குரைஞர் நிலை-2 திருமதி.K.நிவேதா அவர்கள் ஆஜராகியும் எடுத்துரைத்த வாதுரைகளையும் கேட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

**உத்தரவு**

இம்மனு மனுதாரர்/எதிரியால் U/s.497 r/w 503 BNSS ன் கீழ் வழக்கு சொத்தை திரும்பப்பெறுவதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனத்தின் உரிமையாளர் ஆவார். இவ்வழக்கின் எதிரி மனுதாரரிடம் ஓட்டுனராக வேலை செய்யும் நபர் ஆவார். மனுதாரரின் TN 82 X 8831 என்னும் பதிவெண் கொண்ட டிராக்டர் வாகனத்தை கடந்த 02.02.2026 ஆம் தேதியன்று எதிரி உழவு ஓட்டுவதற்காக எடுத்துச்சென்றுள்ளார். இந்நிலையில் மேற்படி வாகனத்தை போலிசார் எதிரி குற்றம் செய்ததாக சொல்லப்படும் இந்த வழக்கில் வேண்டும் என்றே உட்படுத்தியுள்ளார்கள். எதிரியின் மீது ஆணைக்காரன்சத்திரம் காவல்நிலையத்தில் குற்ற எண்.65/2026 ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, மனுதாரருக்கு சொந்தமான TN 82 X 8831 என்கிற பதிவெண் கொண்ட டிராக்டர் வாகனம் காவல்துறையினரால் கைப்பற்றப்பட்டு

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.24 17:39:45 +0530

CP.NO.22/2026 பெறப்பட்டு  காவல் நிலையம் வசம் உள்ளது. மேற்படி  வாகனத்தை வைத்துதான் மனுதாரர் அன்றாட வேலைக்கும், சொந்த பயன்பாட்டிற்கும், அவசிய தேவைகளுக்கும் பயன்படுத்தி வந்ததாகவும்,  இவ்வழக்கு சொத்தான மேற்படி வாகனத்தை மனுதாரர் தனக்கு தேவைப்படுவதால் இடைக்காலமாக தனது வசம் ஒப்படைக்குமாறும், அவ்வாறு நீதிமன்றம் மேற்படி வழக்கு சொத்தை தன்னிடம் இடைக்காலமாக ஒப்படைக்கும்பட்சத்தில் நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு கட்டுப்படுவதாகக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார்.

2.அரசு தரப்பிலும், சம்மந்தப்பட்ட காவல் துறை தரப்பிலும் அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில் பெறப்பட்டதில், ஆணைக்காரன்சத்திரம் காவல் நிலைய குற்ற எண்.65/2026, சட்டப்பிரிவு 173, 109, 296(b), 118(1), 351(3) BNS என்ற  வழக்கின் வழக்கு சொத்தை மனுதாரர் வசம் ஒப்படைத்தால் மீண்டும் குற்ற சம்பவத்தில்  ஈடுபட வாய்ப்புள்ளதாலும், தடயப்பொருளை உருமாற்றம் செய்யவோ, விற்கவோ வாய்ப்புள்ளது என்பதாலும் வாகனத்தை  உரிமையாளரிடம்  ஒப்படைக்க கடுமையான ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. இந்த வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்யும்போது இந்த வழக்கில் கண்டுள்ள மனுதாரருக்கு சொந்தமான வழக்கு சொத்தான  TN 82 X 8831 என்ற பதிவெண் கொண்ட தனது டிராக்டர் வாகனம்  குற்ற எண்.65/2026 சம்பந்தமாக ஆணைக்காரன்சத்திரம் போலிசாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைத்து சி.பி எண் பெறப்பட்டு தற்போது காவல் நிலையம் வசம் இருந்துவருகிறது என்பது தெரியவருகிறது. இந்த வழக்கானது கடந்த 12.02.2026 ஆம் தேதி மதியம் சுமார் 2 மணியளவில் இந்த வழக்கின் புகார்தாரர் தனது கணவருடன் வயலுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக சென்றபோது எதிரி குடும்பத்தாருக்கும் அவர்களுக்கும்  இடையே நீண்ட நாட்களாக நிலவி வந்த குடும்ப பிரச்சனை காரணமாக எதிரிகள் புகார்தாரரை தகாத வார்த்தைகளால் திட்டி, தாக்கி, அவர்களை கொல்ல முயற்சித்தது சம்பந்தப்பட்ட வழக்காகும். மேற்படி வழக்கு சொத்து மனுதாரருக்கு சொந்தமானது என்பதற்கான சான்றாக வாகனத்தின் பதிவுச்சான்று நகல் ஒன்று மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தான் வாகன உரிமையாளர் என்பதை அரசு தரப்பும் மறுக்கவில்லை. மனுதாரர் தனது மனுவில்  தனக்கு சொந்தமான மேற்படி வாகனத்தை தன் வசம் இடைக்காலமாக  ஒப்படைக்க மனு தாக்கல் செய்துள்ளார்.  மேற்படி வழக்கு

KAILAASH R
Digitally signed by KAILAASH R
Date: 2026.03.24 17:39:54 +0530

சொத்து கைப்பற்றப்பட்டு ஆணைக்காரன் காவல் நிலையம் வசம் உள்ள நிலையில், மனுதாரர் குடும்பம் மற்றும் விவசாய தேவைக்கு பயன்படுத்துவதை கருத்தில் கொண்டும், நீண்ட நாட்கள் பயன்படுத்தாமல் இருந்தால் வாகனம் சேதமடைந்து பழுதடையக்கூடும் என்பதையும் கருத்தில் கொண்டும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் 'Sunderbhal Ambalal Desai vs State Of Gujarat' ( SLP Cr.l 2745 of 2022 dated 01.10.2002) என்னும் வழக்கின் முன் தீர்ப்பின் அடிப்படையில், மேற்படி வாகனத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் பின்வரும் நிபந்தனைகள் அடிப்படையில் ஒப்படைப்பதே நீதிக்கு உகந்தது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்து கீழ்கண்ட நிபந்தனைகளுடன் இம்மனுவை அனுமதித்து உத்திரவிடுகிறது.

**நிபந்தனைகள்:**

1. மனுதாரர் மற்றும் 2 நபர்கள் பிணையதாரர்களுடன் தலா ரூ.5,00,000/–ற்கான சொந்த பிணைபத்திரம் எழுதித்தர வேண்டும் என உத்திரவிடப்படுகிறது. மேற்படி நபர்களின் செல்வ நிலையை காண்பிக்க உரிய வரி ரசீது/ சான்றிதழ்/ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டும்.

2.மனுதாரர் வழக்கு சொத்தை நான்கு கோணங்களிலும் புகைப்படம் எடுத்து அந்த புகைப்படத்தையும் மற்றும் அதனை Pendrive ல் பதிவு செய்தும், அவற்றை U/s. 63 BNSS ன் கீழான சான்றிதலோடு ஒப்படைக்க வேண்டும்.

3. மேற்படி வாகனத்தின்அசல் பதிவு சான்றிதழை இந்நீதிமன்ற தலைமை எழுத்தரிடம் காண்பித்து, மேற்படி ஆவண நகலில் 'Compared with original ' என சான்றொப்பம் பெற்று தாக்கல் செய்ய வேண்டும்.

4.வழக்கு சொத்தை வழக்கு முடியும் வரை விற்கவோ, அடகு வைக்கவோ, உருமாற்றம் செய்யவோ கூடாது.

5.மனுதாரர் வழக்கு விசாரணையின்போது வழக்கு சொத்தை நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும்.

6.மனுதாரர் ரூ.5,00,000–க்கு பஞ்சனாமா எழுதிக்கொடுக்க வேண்டும்.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.24 17:40:01 +0530

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு உரைக்கப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் வருடம் மார்ச் மாதம் 24ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய இந்த உத்தரவு என்னால் பகரப்பட்டது.

KAILAASH R

Digitally signed by KAILAASH R
Date: 2026.03.24 17:40:09 +0530

**குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**சீர்காழி**